Thiru K. VINAYAKAM: Whereas it is the fundamental right of anybody to maintain accounts in his own mother-tongue or in any language in the country, is similar facility given to some Officers to learn Hindi and Telugu in case some merchants maintain their accounts in Hindi as well as in Telugu because there is a large section of Telugu people in Madras State?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, அதற்கான எந்தெந்த காரியங்கள், எந்தெந்த நேரத்தில் தேவைப்படு கிறதோ, அந்தச் சந்தர்ப்பத்திலே செய்யப்படும். இந்தி மொழிக்காக இந்த நடவடிக்கை, தெலுங்கு மொழிக்காக இந்த நடவடிக்கை எடுக்கவேண்டு மென்ற கருத்திலே மாறுபாடு இல்லை. எந்த மொழியும் அவசியமே. அரசாங்கத்தினுடைய விற்பனை வரி வருமானத்தை அதிகப்படுத்து வதும், வரி ஏய்ப்பதைத் தடுப்பதும்தான் நமது நோக்கம். இந்திக்காரர் களே அதிகமாகிவிட்டால் அவர்கள் மொழியிலே கணக்கு எடுப்பதுதான் நியாயம்.

திரு. க. ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் மாநிலத்திலே தமிழ்நாட்டு வியாபாரிகள் வியாபாரம் செய்து வருகிறார்கள். அந்த மாநிலம் நம்மைப் போன்று பரந்த மனப்பான்மை யில், தமிழ் மொழியை அங்குள்ள வணிகத் துறை அதிகாரிகள் கற்றுக் கொள்ள வகை செய்து தருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இது அங்குள்ள வணிகத் துறை அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி. உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்திய பூபாகத்தில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் எந்தத் தொழி லையும், எந்தமாதிரியான உத்தியோகத்தையும் செய்வதற்கு ஒவ்வொரு வருக்கும் உரிமை இருக்கிறது. any trad or profession or calling அந்த உரிமைப்படி, குஜராத் மாநிலத்திலுள்ள தமிழ் வியாபாரிகள் தமிழிலே கணக்கு கொடுப்பதைத் தடுக்கமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தாமதித்து வந்த உறுப்பினர்களுக்குத் துணைவினாக் கேட்க அனுமதி.

திரு. சா. மெய்யப்பன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், உபகேள்விகளைக் கேட்டபோது சம்பந்தப்பட்ட உறுப்பினர் வராமலிருந்து, பின்பு உறுப்பினர் வந்திருந்தால் மறுபடி கேட்க அனுமதியளிக்கலாம் என்று இருக்கிறது. **விதி 35(3)-ன்படி,**

When all the questions for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whose name it stands and may permit the member, if present, to ask the question.

என்பது இப்போது அமல்படுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி கேட்ட உறுப்பினர் யாராவது வராமல் இருந்து, அந்த நேரத்தில் கேள்வி கேட்ட பிறகு வந்தால், அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படும். அப்படி யாராவது இருக்கிறார்களா?

திரு. சா. மெய்யப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு என்று இருப்பதை உபகேள்விக்கும் அது பொருந்தும் என்று மாற்ற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியில் தெளிவாக இருக்கிறதே.

3. கவன ஈர்ப்பு.

மதுரை மாவட்டத்தில் மழையின்மையும், சில பகுதிகளைப் பஞ்சப்பகுதி களாக அறிவித்து நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை நிதி அமைச்சர் கவனத் திற்குக் கொண்டுவர திரு. பெ. மலைச்சாமி, மா. இராசாங்கம், திரு. கரு. சீமைச்சாமி, திரு. என்.எஸ். வி. சித்தன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள். திருவாளர்கள் மலைச்சாமி, இராசாங்கம், சீமைச்சாமி ஆகி யோர் இடத்தில் இல்லை. ஆதலால், இப்போது திரு. சித்தன் அவர்கள் அவருடைய அறிவிப்பை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவருவார்கள். மு.ப. 10-00

***திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, " மதுரை மாவட்டத்தில் குறிப்பாக உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை ஆகிய பகுதிகளிலும், மற்றும் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்கள் மூலம் பாசன வசதி பெறும் பகுதிகளிலும் மழை பொய்த்தமையால் அப் பகுதிகளைப் பஞ்சப் பகுதிகளாக அறிவித்து நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய " அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் போதிய மழையில்லை. இதன் விளை வாக, பெரியாறு திட்டப்பகுதியில் குறிப்பிட்ட தேதிக்கு ஒரு திங்கள் முன்னதாகவே நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டது. அதனால் பெரியாறு திட்டப்பகுதியின் கீழ் உள்ள இரு போகப் பயிர்ப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. இவ்வாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித் துள்ளார். பெரியாறு ஆயக்கட்டின் கீழ் எஞ்சியுள்ள பகுதியில் நிலைமை ஓரளவு சீராக உள்ளது. இங்குள்ள பயிர்கள் பெருமளவு காப்பாற்றப் பட்டுவிட்டன. நிலக்கோட்டை வட்டத்தில் நிலைமை மனநிறைவளிக்கத் தக்கதாக இருக்கிறது. ஏனெனில் இந்த வட்டத்தில் பெரும்பகுதி பெரியாறு ஆயக்கட்டில் இருந்து வருகிறது. உசிலம்பட்டி, திருமங்கலம் வட்டங் களில் உள்ள ஏரிகளுக்குப் போதிய அளவு நீர் வழங்கப்படாததால் ஆயக்கட்டில் பெரும்பகுதி தரிசாகவே விடப்பட்டுள்ளது. இந்தப் பகுதி களில் மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்வையிட்டார். வரிவசூலிப் பதைப் பொதுவாகத் தள்ளிப்போட வேண்டிய அவசியம் இல்லை என்றும், 1376-இல் இருந்து 1378-வது பசலி ஆண்டு வரை சேர வேண்டி யுள்ள கடன் நிலுவைத் தொகைகளை மெதுவாக வசூலிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டால் அதுவே போதுமானது என்றும் அவர் கருது கிறார். ஆயினும் விளைச்சல் மிகவும் மோசமாக உள்ள நேர்வுகளில் பருவ காலத் தள்ளுபடி வழங்கவேண்டுமென்று வருவாய் கோட்ட அதிகாரிகளுக்கு அவர் உத்திரவிட்டுள்ளார். திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி, ஆகிய கோட்டங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை நிலவுவதால், கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளும்படி ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கி யுள்ளார். மேலும், இந்தப் பணியை நிறை வேற்றுவதற்கு ரூ. 3 லட்சம் செலவிட ஒப்புதல் அளிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் விண்ணப்பம் செய்து கொண்டுள்ளார். இது குறித்து தேவையான ஆணைகள் கிராம